Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.290/2022 Date:19.08.2026
Deposition of witness for prosecution: PW3(LW13 )
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. ஆனந்த் | Village | இராயப்பன்பட்டி |
| Father/ Husband Name | பாண்டி முனிசாமி | Taluk | உத்தமபாளையம் |
| Age | 56/2026 | Calling | காவல் ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 19.08.2026. TIME 12.30 PM

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**சாட்சி பிஎன்எஸ்எஸ் பிரிவு 348ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை :-**

நான் தற்போது இராயப்பன்பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதல் விசாரணை செய்து மற்றும் வழக்கின் மேல் விசாரணை செய்து குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்த சாா்பு ஆய்வாளர் மாயன் அவர்கள் பணிமாறுதலாகி சென்றுவிட்டதாலும், அவரது கையொப்பம் எனக்கு பரீட்சியம் ஆகும் என்பதாலும் ஆவணங்களை பாா்த்து என்னால் சாட்சியம் அளிக்க இயலும். 05.09.2019 ம் தேதி 10.00 மணிக்கு சிறப்பு சாா்பு ஆய்வாளர் பொன்ராஜ் அவர்கள் நிலையப் பொறுப்பிலிருந்தபோது நிலையத்தில் ஆஜராகி லோகேந்திரன் என்பவர் கொடுத்த புகாரைப் பெற்று புகாரின் தன்மைக்கேற்ப எதிரி மீது இ.த.ச. பிரிவு 294(பி), 324, 506(2) இதச கீழ் குற்ற எண் 246/2019 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார், அதன் பின்னர் வழக்கு கோப்பினை சார்பு ஆய்வாளர் ஜெய்கணேஷ் அவர்கள் மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 03.09.2019-ம்தேதி 11.30 மணிக்கு சம்பவ இடம் சென்று பாா்வையிட்டு சாட்சிகள் மொக்கராசு, அன்பழகன் ஆகியோர் முன்னிலையில் பாா்வை மகஜர், வரைபடம் தயார் செய்தார். பின்னர் வழக்கு கோப்பினை சார்பு ஆய்வாளர் மாயன் அவர்கள் மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்கள் தனிதனியே விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவம் முதற்கட்ட விசாரணையில் உண்மை என தெரியவந்ததால் வழக்கின் எதிரி தேனி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் அவரை கைது செய்யவில்லை. பின்னர் வழக்கில் காயம்பட்ட அ.சா.1,2 க்கு சிகிச்சையளித்த மருத்துவர் ஜாமிலாபாத்திமா அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்று காயச்சான்றுகள் பெற்றார். அ.சா.2 க்கு மேல்சிகிச்சை செய்த மருத்துவர் கருத்துரை சான்று வழங்கிய தேனி க.விலக்கு அரசு மருத்துவமனை மருத்துவர் சந்தானலட்சுமி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்று கருத்துரை சான்று பெற்றார். அ.சா.2 க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என மருத்துவர் சான்று

வழங்கியதால், இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 294(பி), 324, 506(2) இதச கீழ் இருந்து 294(பி), 324, 326, 506(2) இதச கீழ் மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தார். பின்னர் முதல் தகவல்அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் பொன்ராஜ் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். எதிரி மீது சட்டப்பிரிவு மாறுதல் செய்த பிரிவுகளின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார். புகார் **அ.சா.ஆ.2**, முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3**, பாா்வை மகஜர் **அ.சா.ஆ.4**, வரைபடம் **அ.சா.ஆ.5**, விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றுகள் முறையே **அ.சா.ஆ.6, 7,** கருத்துரை சான்று **அ.சா.ஆ.8,** சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ. 9** ஆகும்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1 கொடுத்த சந்தேகத்தின் பேரிலான புகாரினை சரியாக விசாரணை செய்யாமல் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகளை விசாரணை செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.